# குடும்ப ஆராதனை

ஆர். பாலா

சவறின் கிரேஸ் வெளியீடுகள்

# குடும்ப ஆராதனை

Sovereign Grace Publications
P O Box 62 159, Sylvia Park, Auckland, NZ

ஆசிரியர்:
**ஆர். பாலா**

நூல் வடிவமைப்பு:
M. **ஜேம்ஸ்**

நூல் வடிவமைப்பு விவரங்கள்:
எழுத்து: 11/14 வள்ளுவன்;
நூல்: 5.6" x 8.6"; பக்கங்கள்: 24

முதல் பதிப்பு: ஜூன் 2000, நியூசிலாந்து
இரண்டாம் பதிப்பு: ஆகஸ்டு 2008, இந்தியா
மூன்றாம் பதிப்பு: ஜூலை 2012, இந்தியா

ஆசிரியரின் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி
இப்புத்தகத்தையோ அல்லது இதன் பகுதிகளையோ
வெளியிடக் கூடாது

கிடைக்குமிடம்:
6/87 காமராஜர் தெரு,
திருவள்ளுவர் நகர், அயனாவரம்,
சென்னை 600023, தமிழ்நாடு, இந்தியா.
தொலைப்பேசி: +91 9445671113

Available at:
6/87 Kamarajar Street,
Thiruvalluvar Nagar, Ayanavaram,
Chennai 600023, Tamilnadu, India.
Mobile: +91 9445671113

# நூல் அறிமுகம்

இந்த ஆக்கம் "குடும்ப ஆராதனை" என்ற தலைப்பில் திருமறைத்தீபம் காலாண்டு பத்திரிகையில் ஏற்கனவே வெளிவந்தது. இது முதல் பதிப்பாக நியூசிலாந்தில் வெளியிடப்பட்டு அதற்குப் பிறகு இரண்டாம் பதிப்பாக 2008ல் இந்தியாவில் வெளிவந்தது. இப்போது இதன் மூன்றாம் பதிப்பு வெளிவந்திருக்கிறது. பலரின் வேண்டுகோளுக்கிணங்கி மறுபடியும் இதனை வெளியிடுகிறோம்.

கர்த்தர் ஆதியில் குடும்பத்தை உருவாக்கினார். குடும்பம் நலமாக இருந்தால்தான் நாடும் நலமாக இருக்க முடியும். நல்ல குடும்பங்கள் இருந்தால்தான் திருச்சபையும் நலமாக இருக்க முடியும். குடும்பம் நலமாக இருக்க அது கர்த்தரில் நிலைநாட்டப்பட்டிருக்க வேண்டும். கர்த்தரில் நிலை நாட்டப்பட்டிருக்கும் குடும்பங்கள் தொடர்ந்து கிறிஸ்துவின் சமாதானத்தில் நிலைத்திருக்க வேண்டுமானால் குடும்பத் தலைவனின் தலைமையில் அன்றாடம் குடும்ப அங்கத்தவர்கள் கூடி குடும்ப ஆராதனையில் ஈடுபட வேண்டியது அவசியம். வேதம் ஆரம்ப முதல் அத்தகைய குடும்ப ஆராதனையின் அவசியத்தையும், அதன் பலாபலன்களையும் விளக்குகிறது. யோபு இதற்கு ஒரு நல்ல உதாரணம்.

திருச்சபை ஆராதனைக்குப் பதிலாக அதனுடைய இடத்தை குடும்ப ஆராதனை பெற்றுவிட முடியாது. திருச்சபை ஆராதனை எத்தனை அவசியமோ அத்தனை அவசியம் குடும்ப ஆராதனையும். ஓய்வுநாளில் திருச்சபை கூடிவரும்போது திருச்சபை ஆராதனை நடக்க வேண்டும். குடும்பங்கள் கூடி

அன்றாடம் வீட்டில் குடும்ப ஆராதனையை நடத்த வேண்டும். குடும்ப ஆராதனை திருச்சபை ஆராதனையை அகற்றப் பிறந்ததாக இல்லாவிட்டாலும் அது திருச்சபை ஆராதனைக்கு வளமூட்டும் வல்லமையைக் கொண்டிருக்கிறது. வீட்டில் அனுதினமும் கூடி ஆராதித்து வரும் குடும்பங்கள் ஓய்வுநாளில் திருச்சபை ஆராதனையை அநுபவிக்க எதிர்பார்ப்போடு இருப்பார்கள். குடும்ப ஆராதனையால் வளரும் அத்தகைய குடும்பங்களே திருச்சபைக்கும் வளமூட்டும். குடும்ப ஆராதனை எத்தனை அவசியமானது என்பது இப்போது தெரிகிறதா?

நவீன சமுதாயத்தில் வாழ்கிறவர்கள் குடும்ப ஆராதனையைப் பழமையானதாகக் கருதி அதனை வழக்கத்தில் கொள்ளாதவர்களாக இருக்கிறார்கள். சமுதாய வாழ்க்கையின் பரபரப்பையும், வேலைப்பளுவையும், நேரமின்மையையும் காரணங்களாகக் காட்டி அநேகர் குடும்ப ஆராதனையைத் தவிர்த்துவிடுகிறார்கள். கிறிஸ்தவ வீடுகளில் வளரும் பிள்ளைகள் குடும்ப ஆராதனையைப் பற்றி அறியாமலேயே வளர்ந்து வருகிறார்கள். குடும்ப ஆராதனையைப்பற்றிப் போதித்து, அதை நடத்தும் வழியைச் சொல்லிக் கொடுத்து ஊர் மக்களையும், திருச்சபையையும் வளர்த்த பியூரிட்டன் பெரியவரான ரிச்சட் பெக்ஸ்டரைப் போல ஊழியம் செய்யும் போதகர்களை இன்று காண்பதரிது. பழம் பஞ்சாங்கம் என்று நம்மை உதறிவிடுவார்கள் என்ற பயத்தில் பெரும்பாலான போதகர்கள் இதன் பக்கம் போவதில்லை. சுவிசேஷத்தை சொல்லுவதற்கு மேல் வேறொன்றையும் செய்யும்படி ஆத்துமாக்களை வற்புறுத்தக் கூடாதென்ற போலித் தாழ்மையாலும், கிறிஸ்தவ சுதந்திரத்தைக் காரணம்காட்டியும் பலர் குடும்ப ஆராதனை பற்றி திருச்சபையில் பிரசங்கித்து ஆத்துமாக்களை வழிநடத்துவதில்லை. திருச்சபை இன்றைக்கு தமிழினத்தில் பக்திவிருத்தியற்று, ஆவியின் வல்லமையற்று, வேதக் கோட்பாடுகளில் உறுதியற்று காணப்படுவதற்கு குடும்ப ஆராதனை நடத்தும் வழக்கம் குடும்பங்களில் இல்லாததும் ஒரு பெருங்காரணம். கிறிஸ்தவம் வரலாற்றில் உயர்ந்த நிலையில் இருந்த காலப்பகுதிகளிலெல்லாம் குடும்ப ஆராதனை கிறிஸ்தவ குடும்பங்களில் முக்கியமான

*இடம் வகித்திருந்திருக்கிறது. இதற்கு மார்டின் லூத்தர், ஜோன் கல்வின், ஜோன் பனியன், ஸ்பர்ஜன் ஆகியோரின் எழுத்துக்கள் சாட்சிகளாக இருக்கின்றன.*

*குடும்ப ஆராதனையின் அவசியத்தை விளக்கி அதை எப்படிக் குடும்பங்களில் நடத்துவது என்று விளக்கும் இந்நூல் உங்களுக்குத் துணைபுரிந்து பக்திவிருத்தியில் நீங்களும், உங்கள் குடும்பமும் வளர கர்த்தர் துணைபுரிவாராக.*

**ஆர். பாலா**

போதகர், சவரின் கிரேஸ் திருச்சபை,
ஆக்லாந்து, நியூசிலாந்து

# குடும்ப ஆராதனை

*இன்று கிறிஸ்தவர்களில் அநேகருக்கு குடும்பத்தின் மகிமை புரியாமலிருக்கிறது. குடும்பம் எப்படி இருக்க வேண்டும்? ஒருவரது குடும்ப வாழ்க்கையில் கர்த்தர் எதை எதிர்பார்க்கிறார்? என்பதெல்லாம் புரியாமலேயே அநேகர் குடும்பம் நடத்திக் கொண்டு வருகின்றனர். இது நாம் வருந்த வேண்டிய ஒரு செயல். குடும்பத்தின் நிலைமை இப்படி இருக்கும்போது அதில் குடும்ப ஆராதனையை நாம் எப்படி எதிர்பார்க்க முடியும்? குடும்ப ஆராதனையா, அது என்ன? என்று கேட்கக் கூடியவர்களும் இன்று இருக்கிறார்கள்.*

## திருமறையில் குடும்ப ஆராதனை

*குடும்ப ஆராதனை என்றால் என்ன? என்று முதலில் கவனிப்போம். சுருக்கமாகக் கூறப்போனால், ஒவ்வொரு கிறிஸ்தவ குடும்பமும், அன்றாடம் அந்நாளின் ஒரு நேரத்தில் கூடி, அக்குடும்பத் தலைவரால் வழிநடத்தப்பட்டு, வேதத்தை வாசித்து, ஊன்றிப் படித்து, சங்கீதங்கள், கீர்த்தனைகள் பாடி, ஜெபத்தில் கர்த்தருக்குமுன் வருவதுதான் குடும்ப ஆராதனை. ஒவ்வொரு குடும்பமும் இதைச் செய்ய வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். இப்போதனை வேதத்தில் எப்படிக் கொடுக்கப்பட்டிருக்கின்றதென்று பார்ப்போம். முதலில், குடும்ப ஆராதனையின் அவசியத்தை இயற்கையின் விதிகள் நமக்குப் போதிக்கின்றன. அதாவது ஆராதனையின் தேவன் நம்மை ஆராதிக்கும் மனிதர்களாகப் படைத்திருப்பதால், நாமும் நமது குடும்பமும் தவறாமல் அவரை ஆராதிக்க வேண்டும். எல்லாமே கர்த்தருக்குச் சொந்தமானதாக இருக்கின்றது. நாமும்*

*நமது குடும்பமும் அவருக்கே சொந்தம். நம்மை அன்றாடம் ஆளும் அத்தேவனை நமது குடும்பங்கள் ஆராதிக்க வேண்டும். இதையே வேதத்தில் நாம் காணும் மனிதர்கள் அனைவரும் ஆதியில் இருந்து செய்து வந்துள்ளனர்.*

*இரண்டாவதாக, வேதமும் குடும்ப ஆராதனையின் அவசியத்தைப் பற்றிப் போதிக்கிறது. ஆபிரகாமும் (ஆதி. 17:18), யாக்கோபுவும் அவர்களுக்குப் பின்வந்த மனிதர்களும் குடும்ப ஆராதனையை நடத்தியுள்ளனர். யோபு இதற்கு ஒரு சிறந்த உதாரணம் (யோபு 1:1-5). சங்கீதப் புத்தகத்தின் பெரும் பகுதியும் இதைக் குறித்துப் பேசுவதைப் பார்க்கலாம் (சங். 92:1, 2; 141:2). உபாகமம் 6:6,7 வசனங்களில், "நான் கட்டளையிடுகிற வார்த்தைகளை . . . உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிற போதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்கிறபோதும், எழுந்திருக்கிற போதும் அவைகளைக்குறித்துப் பேசு" என்று கர்த்தர் தன் மக்களுக்குக் கட்டளையிட்டார். புதிய ஏற்பாடும் இதே போதனையை அநேக இடங்களில் தருகின்றது. பின்வரும் வசனங்களை நாம் ஆராய்ந்து பார்த்தால் அது தெளிவாகப் புலப்படும். அப்போஸ். 10:2, 30; பிலி. 4:6; கொலோ. 4:2; 1 தெச. 5:17,18. இவ்வசனங்கள் குடும்ப ஆராதனைப்பற்றிய உதாரணங்களையும், போதனைகளையும் வழங்குகின்றன. ஆகவே, குடும்ப ஆராதனையின் அவசியத்தை வேதம் தெளிவாகப் போதிப்பதைக் காணலாம்.*

*இவ்வேத உண்மைகள் அநேகருக்குப் புரியாமலிருப்பதற்குக் காரணம் அவர்கள் கிறிஸ்தவ வேத அறிவில் வளராதது மட்டுமன்றி, உலகப்பிரகாரமான எண்ணங்களுக்கு தங்கள் வாழ்க்கையில் இடம் கொடுத்து அதன் வழியில் போய்க் கொண்டிருப்பதுதான். சமீபத்தில் தமிழில் குடும்ப வாழ்க்கைப்பற்றிய ஒரு கிறிஸ்தவ நூலை வாசித்தேன். அதில் ஒரு பக்கத்திலாவது குடும்ப ஆராதனைப்பற்றிய எந்தவிதப் போதனையும் கொடுக்கப்படவில்லை. இது குடும்ப ஆராதனை பற்றி எந்தளவுக்கு நம்மத்தியில் போதிக்கப் படுகிறது என்பதற்கு ஒரு நல்ல உதாரணம். வேதத்தைப் பொறுத்தவரையில் குடும்பம் நிலைக்க வேண்டுமானால்*